



கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்க நேற்று முன்தினம் (19.10.2024) வருகை தந்த துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு, மணலூர்ப்பேட்டையில் கழகத்தினர் – இளைஞர் அணியினர் மற்றும் அனைத்துத் தரப்பு பொதுமக்களும் உற்சாக வரவேற்பளித்தனர்.




துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நடைபெறும் மாவட்ட ஆய்வுக்கூட்டத்தில் பங்கேற்க செல்லும் வழியில், தியாகதுருகம், வீரசோழபுரம் டோல்கேட், கள்ளக்குறிச்சி நகரம் உள்ளிட்ட இடங்களில் பல்லாயிரக்கணக்கான கழகத் தோழர்கள், உடன் பிறப்புகள் – இளைஞரணியினர் – மகளிர் – பொதுமக்கள் திரண்டு உற்சாக வரவேற்பளித்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (19.10.2024) கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில், மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன். நாடாளுமன்ற உறுப்பினர்கள் தே.மலையரசன் (கள்ளக்குறிச்சி), முனைவர்.து.ரவிக்குமார் (விழுப்புரம்), சட்டமன்ற உறுப்பினர்கள் தா.உதயசூரியன் (சங்கராபுரம்), வசந்தம் க.கார்த்திகேயன் (Kஷிவந்தியம்), ஏ.ஜே.மணிக்கண்ணன் (உளுந்தூர்பேட்டை), மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் திருமதி.புவனேஸ்வரி பெருமாள், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலாளர் டாக்டர்.தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை துணை செயலாளர் எம்.பிரதாப், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.10.2024) அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு மாநில ஊரக/ நகர்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் அமைக்கப்பட்டிருந்த மகளிர் சுய உதவிக் குழுக்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் கண்காட்சியினை பார்வையிட்டார். இந்நிகழ்வில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (19.10.2024) திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை,, எம்.எஸ்.தரணிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி அம்பேத்குமார், ஓ.ஜோதி , பெ.சு.தி. சரவணன், மாநகராட்சி மேயர் திருமதி. நிர்மலா வேல்மாறன், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலாளர் தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், சிறப்பு திட்ட செய லாக்கத் துறை துணை செயலாளர் எம்.பிரதாப், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.10.2024) திருவண்ணாமலை புதிய பேருந்து நிலைய கட்டுமான பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த நிகழ்வில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை (திருவண்ணாமலை), எம்.எஸ்தரணிவேந்தன் (ஆரணி), சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி(செங்கம்), எஸ்.அம்பேத்குமார் (வந்தவாசி), ஓ.ஜோதி (செய்யார்) பெ.சு.தி.சரவணன் (கலசப்பாக்கம்), மாநகராட்சி மேயர் நிர்மலா வேல்மாறன், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலாளர் டாக்டர்.தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை துணை செயலாளர் எம். பிரதாப், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.